## 65

# "சகலத்தையும் புதிதாக்குதல்"

## (21:1-8)

*வெளிப்படுத்தின விசேஷம் புதிய விஷயங்களால் நிறைந்துள்ளது: நாம், "ஒரு புதிய நாமம்" (2:17; 3:12), ஒரு "புதிய எருசலேம்" (3:12; 21:2ஐக் காணவும்), மற்றும் "ஒரு புதிய பாடல்" (5:9; 14:3) ஆகியவற்றைக் கொண்டிருந்தோம். இப்போது 21ம் அதிகாரத்தில், நாம் "ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும்" பற்றி வாசிக்கின்றோம் (வசனம் 1), மற்றும் நாம் கர்த்தரிடத்தில் இருந்து பின்வரும் அறிவித்தலையும் கொண்டுள்ளோம்: "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வசனம் 5). அந்தக் கடைசிக்கூற்றில் "புதிது" என்ற வார்த்தையின் மீதே வலியுறுத்தம் உள்ளது; மூலவசனத்தில்,* "Behold, I am making all things new" *என்றுள்ளது. இது இப்புத்தகத்தில், தேவன் தாமே பேசுகின்ற ஒருசில வேளைகளில் ஒன்றாக உள்ளது;*[1] *அவரது வார்த்தைகள் விசேஷ முக்கியத்துவத்தை நோக்கங் கொண்டிருக்கின்றன என்பது உறுதி.*

*நான் புதிய விஷயங்களை எப்போதுமே விரும்பிருக்கின்றேன். நான் ஒரு பையனாக இருந்தபோது, ஒரு புதிய கல்வி ஆண்டின் தொடக்கத்தை விரும்பினேன், ஏனெனில் அப்போது நான் புதிய உடைகள், புதிய புத்தகங்கள், புதிய எழுதுபலகைகள் மற்றும் பென்சில்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வது உண்டு. ஆண்டுகளினூடே, புதிதாக உள்ளவற்றைக் கண்ணோக்குதல், உணருதல், நுகருதல் ஆகியவற்றைத் தொடர்ந்து மகிழ்வுடன் அனுபவித்துக்கொண்டிருந்தேன். நான் முதியவனாக வளருகையில், எல்லாம் புதியதாக உள்ள நாட்டிற்காக இன்னும் அதிகம் ஏங்குகின்றேன்.*

*வெளிப்படுத்தின விசேஷம் 21:1-22:5 வசனப்பகுதி, நாம் பரலோகம் என்று அழைக்கின்ற இடத்தைப் பற்றிக் கூறுகிறது என்று நான் நம்புகின்றேன். இந்த அதிகாரங்கள் எழுதப்படுவதற்கு முன்பு, ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் அவ்வப்போது அந்த இடம் பற்றிய சிறுதுணுக்குக் குறிப்புகளைக் கொடுத்திருந்தனர், ஆனால் அதிகமானவற்றிற்காக இருதயங்கள் ஏங்கின. பேட்ஸெல் பேர்ரெட் பேக்ஸ்டர் என்பவர் பின்வருமாறு எழுதினார்,*

> *வேதாகமத்தில் உள்ள அறுபத்தி - ஆறு புத்தகங்களில், அறுபத்தி ஐந்து புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டிருந்தபோது, கடைசிப் புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம், ஏறக்குறைய அதன் முழுமைத்துவத்தில் எழுதப்பட்டிருந்தது, தேவனுடைய*

*வார்த்தையாகப் பதிவுசெய்யப்பட்டவை எல்லாவற்றின் கடைசிக் காலவேளை எல்லாக்காலத்திற்குமாக வைக்கப்பட வேண்டிய நேரத்தில், இன்னும் கூடுதலாக எட்டே எட்டு பத்திகள் மாத்திரம் எழுதப்படவிருந்த வேளையில் தேவன், பரலோகம் பற்றிய சித்தரிப்பைக் கொடுத்தார்.*[2]

21 மற்றும் 22ம் அதிகாரங்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் மிகவும் நன்கு பழக்கமான பாகமாக உள்ளன. பல வேதாகமங்களில், வெளிப்படுத்தின விசேஷத்தின் முந்திய பகுதிகள், அந்த வேதாகமங்களை வாங்கியபோது இருந்தது போன்றே மிகவும் சுத்தமாக இருக்கையில், கடைசி இரண்டு அதிகாரங்கள் மாத்திரம் தொடர்ந்து வாசித்ததினால் அந்த அதிகாரங்கள் உள்ள காகிதங்கள் நைந்துபோய் - ஒரு வேளை கண்ணீரினால் கறைபட்டு - உள்ளன. ஒரு சில வசனப்பகுதிகளே இந்த அதிகாரங்களைக் காட்டிலும் அதிகமாக வாசிக்கப்படுகின்றன. வேறு எந்த வசனப்பகுதியும் இதைப் போன்று அதிகமான இருதயங்களுக்கு ஆறுதல் கொடுத்ததில்லை.

இந்தப் பாடத்தில் நாம், எல்லாம் புதிதாக்கப்படும் என்பதை அறிமுகப்படுத்தித் தொகுத்துரைக்கும் 21:1-8 வசனப்பகுதியைப் படிப்போம்.

## "இந்த வசனப்பகுதி நமக்கு பரலோகத்தைப் பற்றிக் கூறுகிறதா?"

நாம் நமது வசனப்பகுதிக்குள் செல்வதற்கு முன்பாக, 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் பரலோகத்தைப் பற்றி பேசுகின்றனவா இல்லையா என்பதைப் பற்றிக் கலந்துரையாடுதல் அவசியமாக உள்ளது.

முந்திய பாடத்தில் நான், 20:11-15 வசனப்பகுதியானது தேவனுடைய தற்காலிக நியாயத்தீர்ப்பை (குறிப்பாக, ரோமாபுரியின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை) சித்தரிக்கிறது என்று சில விளக்கவுரையாளர்கள் நம்புவதாக குறிப்பிட்டிருந்தேன். அதுபோலவே, 21:1-22:5 வசனப்பகுதி, பூமியின்மீது சபையை, விசேஷமாக ரோமாபுரியின் துன்புறுத்துதல் முடிந்தபின்பு வெற்றிகரமாக விளங்கின சபையைச் சித்தரிப்பதற்கானது என்று சிலர் நம்புகின்றனர்.[3] 20:11-15 வசனப்பகுதி தற்காலிக நியாயத்தீர்ப்பை குறிக்கலாம் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன், ஆனால் இவ்வசனப்பகுதி மகா மற்றும் கடைசி நியாயத்தீர்ப்பின்நாள் பற்றிக் கூறுகிறது என்று நான் நம்புவதற்கான காரணங்களைக் கொடுத்திருந்தேன். அதுபோலவே, 21:1-22:5ம் வசனப்பகுதி, பூமியின்மீது இலட்சிய நோக்கான சபையைப் பற்றிச் சித்தரிக்கக்கூடும்,[4] ஆனால் இவ்வசனப்பகுதி, பரலோகம் என்ற ஆத்துமாக்களின் இல்லம் பற்றி நமக்குக் கூறுகிறது என்று நான் நம்புகின்றேன். தானியேல் ரஸ்ஸல் என்பவர், "எல்லாக்காலங்களிலும் சபையானது இவ்வசனப்பகுதியில் பரலோகத்தின் விவரிப்பைக் கண்டுள்ளது" என்று எழுதினார்.[5] ஹெரால்டு ஹேஸெலிப் என்பவர்: "மீட்கப்பட்டவர்களின் அடைவிடம் என்பதே வெளிப்படுத்தின

*விசேஷத்தில் உள்ள இந்த முடிவுப்பகுதியின் பிரதான ஆய்வுக்கருத்தாக உள்ளது"[6] என்று உடன்பட்டார்.*

*20:11-15 வசனப்பகுதியானது கடைசி, நியாயத்தீர்ப்பு பற்றியது என்று நம்புவதற்கு நான் கொடுத்த காரணங்களை முந்திய பாடத்தில் ஆய்வுசெய்யுங்கள். அதுபற்றி எனது கருத்து சரியானதென்றால், 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் பரலோகத்தைச் சித்தரிக்கின்றன என்ற எனது கருத்தும் சரியானதாகவே இருக்கவேண்டும். நாம், "தற்போதைய ஒழுங்கமைவுகள் கடந்து செல்லுதல், மனிதகுலத்திற்குக் கடைசி நியாயத்தீர்ப்பு, துன்மார்க்கருக்குத் தண்டனை" ஆகியவற்றைக் கண்ணோக்கியிருந்தால் பின்பு, "சபையானது காலத்திற்கு அப்பால் தேவனிடத்தில் இளைப்பாற வருகையில், அதன் கடைசி மகிமையைச் சித்தரித்தல் என்பது அடுத்த காட்சியாக இருக்கும் என்ற கருத்து தர்க்கப்பொருத்தமானதாக உள்ளது."[7]*

*21:1-22:5 வசனப்பகுதி, பரலோகத்தைப் பற்றி நமக்குக் கூறுகிறது என்று நான் நம்புவதற்குக் கூடுதலான காரணங்கள் குறிப்பிடப்பட முடியும்:*

*(1) இதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை, பரலோகத்தைப் பற்றி நாம் அறியக்கூடிய பிறவேதாகமக் குறிப்புகளுடன் சீர்பொருந்தியுள்ளது.*

*(2) தேவன் "கண்ணீர்கள் யாவையும் துடைப்பார்" (21:4) என்ற வாக்குத்தத்தம், ஏற்கனவே மரித்திருந்தவர்களுக்குத் தேவன் 7:17ல் கொடுத்த அதே வாக்குத்தத்தமாகவே உள்ளது. இது இந்த வாழ்விற்குரிய தாயிராமல், இனிவரும் வாழ்விற்குரிய வாக்குத்தத்தமாக உள்ளது என்பது உறுதி. இந்த உலகத்தில் தேவன், நமது வருத்தங்களில் ஆறுதல் அளிக்கின்றார்; இனிவரும் வாழ்வில், அவர் நமது வருத்தங்களை நீக்கிப்போடுவார்.*

*(3) "ஜெயங்கொள்ளுகிறவர்கள்" (21:7) பெறும் சுதந்திரம், துன்மார்க்கரின் முடிவில் இருந்து நேர்மாறானதாக உள்ளது (21:8). நீதிமான்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம் "சதாகாலங்களிலும்" (22:5) இருக்கும், அதுபோலவே அநீதிமான்களுக்குக் கிடைக்கும் சாபமும் "சதாகாலங்களுக்கும்" (20:10; 20:15; 21:8ஐக் காணவும்) இருக்கும்.*

*(4) இவ்வசனப்பகுதி, "புதிய வானம் மற்றும் புதிய பூமி" பற்றிய பேதுருவின் போதனையுடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஹோமர் ஹெய்லி என்பவர் பின்வருமாறு கவனித்துள்ளார்,*

> *புதிய வானம் மற்றும் புதிய பூமி பற்றிப் பேதுரு எழுதிய விபரங்களைக் கவனமாய் படிக்கின்றபோது (2 பேதுரு 3) அது, யோவான் விவரிக்கின்றவற்றுடன் கவனிக்கத்தக்க அளவுக்கு இணைவுபட்டுள்ளது என்று வெளிப்படுகிறது. நியாயத்தீர்ப்பு மற்றும் தேவபக்தியற்ற மனிதருக்கு அழிவு (2 பேதுரு 3:7; வெளிப்படுத்தின விசேஷம் 20:13), மற்றும் புதிய வானமும் புதிய பூமியும் வருவதற்கு (2 பேதுரு 3:13; வெளிப்படுத்தின விசேஷம் 21:1) முன்பு இப்போதைய வானமும் பூமியும் ஒழிந்து போகுதல் (2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 20:11) ஆகியவற்றைப் பற்றி இவ்விரு விபரங்களுமே சுட்டிக்காண்பிக்கின்றன. பேதுருவும் யோவானும் ஆகிய இருவருமே,*

இன்றைய நாட்களில் சபையைப் பற்றியும், துன்புறுதலினால் தூய்மையடைதல் பற்றியும் அல்ல, ஆனால் அதற்கு மாறாக, கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றியும் அதைத்தொடர்ந்து வரவிருப்பதைப் பற்றியும் எழுதினர் ... . பேதுருவும் யோவானும் ... நியாயத்தீர்ப்புக்கு அப்பால் உள்ள கடைசியும் நித்தியமுமான முறைமை பற்றி எழுதினர்.[8]

(5) முந்திய பாடத்தில் குறிப்பிட்டபடி, வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரங்கள் ‘‘ஏறக்குறைய ஒரே மாதிரியாக’’ மாத்திரம் இருக்கின்றன என்ருல், இந்தப் புத்தகம் எதிருச்சக்காட்சி என்பது போன்ற ஒன்றைக்கொண்டு முடிகிறது. பல எழுத்தாளர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 20 மற்றும் 21ம் அதிகாரங்கள், வெளிப்படுத்தின விசேஷத்திற்கும், வேதாகமம் முழுவதற்கும்கூட ஒரு உச்சக்காட்சியை அளிக்கின்றன என்று ஒப்புக்கொள்கின்றனர். ஆல்பெர்ட் பால்டிங்கெர் என்பவர், தமது உரையைக் கேட்பவர்கள் வைத்துள்ள வேதாகமங்களில் இருந்து, வெளிப்படுத்தின விசேஷத்தின் இருபத்தியோராம் அதிகாரம் கொண்ட தாள்கள் கிழிக்கப்பட்டுவிட்டால் அவர்கள் உணர்வு எப்படியிருக்கும் என்று கேட்டார்: “நீங்கள் உங்கள் வாழ்வின் எஞ்சிய நாட்களில் எல்லாம், ‘இழந்துபோன வீணைநரம்பின்’ உணர்வுடனே வாழ்வீர்களோ என்று நான் ஐயப்படுகின்றேன். இது ஹேன்டெல் என்பவரின் ‘மேசியா’ என்ற பாடலில் இருந்து ‘அல்லேலூயா’ என்ற பல்லவியை நீக்கிவிடுதலைப் போன்றதாக உள்ளது.”[9]

வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்கள், பூமியில் சபையைச் சித்தரிக்கின்றன என்று நம்புபவர்கள், இவ்வசனப்பகுதியில் உள்ள பல சொல்விளக்கங்கள் தங்கள் மாற்றுப்பிரதியை, மேசியாவின் இராஜ்யம்/சபை என்பதன் நிலை நாட்டம் பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் கொண்டுள்ளன என்று சுட்டிக்காண்பிக்கின்றனர். ‘‘புதிய எருசலேமுடன்’’ தொடர்புடைய சொற்றொடர்களில் பல, வேதாகமத்தின் வேறிடங்களில் சபை தொடர்பாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றனர். இந்த உறுதிப்பாடுகள் எதையும் சந்தேகப்படாத நான், சபை மற்றும் பரலோகம் ஆகியவற்றுக்கு இடையில் உள்ள நெருங்கிய - பிரிக்க இயலாததாகவும் உள்ள - உறவுமுறையை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

சபை மற்றும் பரலோகம் ஆகியவை ஒரே உண்மை நிலையில் இரு பக்திக்கூறுகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக, இவையிரண்டுமே ‘‘இராஜ்யம்’’ என்று அழைக்கப்படுகின்றன. ‘‘இராஜ்யம்’’ என்ற சொற்றொடர், தேவன் ஆளுகை செய்யும் வட்டாரத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தற்கால யுகத்தில், இதன் பூமிக்குரிய சொல்விளக்கமானது/வெளிப்பாடானது சபை என்று அழைக்கப்படுகிறது (மத்தேயு 16:18, 19), அதே வேளையில் இதன் பரலோகத்துவ அம்சமானது பரலோகம் என்று மாத்திரம் அழைக்கப்படுகிறது (மத்தேயு 6:9, 10, 20).[10] இவ்விதமாக புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், இராஜ்யத்திற்குள் (வேறு

*வார்த்தைகளில் கூறுவதென்றால் சபைக்குள்; கொலோசெயர் 1:13; எபிரெயர் 12:28; வெளிப்படுத்தின விசேஷம் 1:6, 9; 5:10 ஆகியவற்றைக் காணவும்), இருத்தல் என்பதைப் பற்றிக் குறிப்பிட முடிந்த அதே வேளையில், இராஜ்யத்திற்குள் (அதாவது பரலோகத்திற்குள்; நடபடிகள் 14:22; 2 தீமோத்தேயு 4:18; யாக்கோபு 2:5; 2 பேதுரு 1:11) பிரவேசித்தல் என்பதை முன் எதிர்நோக்கியிருந்தனர்.*[11]

*சபை மற்றும் பரலோகம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள நெருங்கிய உறவின் காரணமாக, சபையாரால் (கிறிஸ்தவர்களால்) தற்போது மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் ஆசீர்வாதங்கள், பரலோக சந்தோஷத்தின் முன்சுவைகள் என்று நினைக்கப்பட முடியும். பின்வரும் விவரிப்பைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும்: தேவனுடைய சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் தேவன் தமது ஆவியை அருளுகின்றார் (நடபடிகள் 2:38, 41, 47). இந்த வரத்தைப்பற்றிப் பவுல், "... வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் ... ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" என்று எழுதினார் (எபேசியர் 1:13, 14அ).* NIV *வேதாகமத்தில், "வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்த ஆவியானவருக்குள் நீங்கள் ஒரு முத்திரையால் அடையாளமிடப்பட்டீர்கள், அவர் நமது சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துகின்ற* (deposit) *அடைக்கலப்பொருளாக இருக்கின்றீர்கள்" என்றுள்ளது. அதாவது அடைக்கலப்பொருள் என்பது முன்னதாகக் கொடுக்கப்படும் ஒரு தொகையாக உள்ளது, சட்டப்படி இது செலுத்துகையின் எஞ்சிய வகையில் உள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது. இப்போது தேவனுடைய ஆவியானவரின் பிரசன்னத்தை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பது நமது நித்திய சுதந்திரத்திற்கான ''உத்தரவாதமாக'' இருப்பதோடுகூட, அந்த சுதந்திரத்தின் ''முன் சுவையாகவும்" இருக்கிறது - அந்த சுதந்திரத்தைப் பெறும் வேளையில் நாம் இப்போது இருப்பதைக் காட்டிலும் தேவனுடன் இன்னும் அதிக நெருக்கமான உறவைக் கொண்டிருப்போம் (வெளிப்படுத்தின விசேஷம் 21:3).*

*ஆகையால், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், மேசியாவின் இராஜ்யத்தினுடைய வருகையைப் பற்றிப் பேசுவதற்கு, வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்களில் உள்ள சொற்றொடருக்கு ஒத்தவைகளைப் பயன்படுத்தியிருந்தது பற்றி நான் வியப்படைவதில்லை. அதுபோலவே, சபையில் உள்ள ஆசீர்வாதங்களைப் பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே சொற்றொடர்கள் பரலோகத்தில் உள்ள ஆசீர்வாதங்களைப்பற்றி பேசுவதற்குப் பயன்படுத்தப்படுவது பற்றியும் நான் ஆச்சரியப்படுவதில்லை. சபை நிலைநாட்டப்படுதல் என்பது தன்னிலே முடிவடைந்த ஒரு செயலாக இருப்பதில்லை. மனிதரைத் தேவனிடம் திரும்பக்கொண்டுவந்து சேர்ப்பதற்காக சபையானது நிலைநாட்டப்பட்டது, இதன்மூலமாக, பூமிக்குரிய பரதீசில் இழந்துபோகப்பட்டது (ஆதியாகமம் 2; 3) வானத்துக்குரிய பரதீசில் மீளக்கட்டுவிக்கப்படலாம் (வெளிப்படுத்தின விசேஷம் 22:1, 2).*

*21:1-22:5 வசனப்பகுதியைப் பற்றி நான் கலந்துரையாடுகையில், இவ்வசனப்பகுதி பரலோகத்தைப் பற்றிப் பேசுகிறது என்பதே எனது நிலைப்பாடாக இருக்கும். இது, நமது கலந்துரையாடலில் சபை புறக்கணிக்கப்படும் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மகிமைப்படுத்தப் பட்ட சபையாக, தேவனுடைய மக்கள் நித்திய ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவித்தலை நாம் கண்ணோக்குவோம். இந்த அதிகாரங் களில், மக்கள் (சபை) மற்றும் இடம் (பரலோகம்) ஆகிய இரண்டிற்கும் வித்தியாசப்படுத்துதல் என்பது அடிக்கடி சிரமமானதாக உள்ளது.*

## "இவ்வசனப்பகுதி பரலோகத்தைப் பற்றிக் கூறுவது என்ன?"

*நாம் ஏற்கனவே கண்ணோக்கியுள்ளபடி, முதல் எட்டு வசனங்களில், பரலோகத்தின் புதியதன்மை என்பதன்மீதே வலியுறுத்தம் உள்ளது. ஆவியானவரால் ஏவப்பட்ட யோவான், பரலோகம் எவ்வளவு ஆச்சரிய மானதாக இருக்கும் என்பதை வலியுறுத்துவதற்கு மனித மொழியின் எல்லைகளை நீட்டினார்.*

**ஒரு புதிய சுற்றுச்சூழல் (21:1)**

*அப்போஸ்தலர் (யோவான்), "பின்பு நான் புதிய வானத்தையும்[12] புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் பூமியும் ஒழிந்துபோயின" என்று தொடங்கினார் (வசனம் 1அ). நமது முந்திய பாடத்தில் நாம், "தேவனுடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை" என்று கண்டோம் (20:11). "புதிய வானத்திற்கும் புதிய பூமிக்கும்" இடமளித்தல் என்பது இதன் ஒரு நோக்கமாய் இருந்தது.*

*"புதிய பூமி" என்ற சொற்றொடர் உள்ளடக்கப்பட்டிருத்தலானது எழுத்தாளர்களைத் திகைக்கச் செய்கிறது. பௌதீகரீதியான இந்த பூமி புதுப்பிக்கப்படுதல் பற்றி விரிவான கோட்பாடுகளைப் பலர் புனைந்துரைக்கின்றனர். இருப்பினும், பௌதீகரீதியான இந்த அண்டம் அழிக்கப்படும் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.[13] இயேசு, "வானமும் பூமியும் ஒழிந்துபோம்" என்று தெளிவாகக் கூறினார் (மத்தேயு 24:35; மத்தேயு 5:18ஐக் காணவும்). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், உண்டாக்கப்பட்டவைகள் மாறிப்போகும்/நீங்கிப்போகும் என்று எழுதினார் (எபிரெயர் 12:27). பேதுரு, "வானங்கள் வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம்" என்று வலியுறுத்தினார் (2 பேதுரு 3:12).*

*பின்பு ஏன் யோவான், "புதிய பூமி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்? முதலாவது, அவர் விஷயங்களின் முறைமையில் உள்ள நாடகத்துவமான மாற்றத்தை விவரிக்க, முன்பிருந்த ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களிடத்தில் இருந்து சொற்றொடர்களைக் கடன் பெற்றார். ஏசாயா மேசியாத்துவம் பற்றிய தமது தீர்க்கதரிசனத்தில் "புதிய வானங்கள் புதிய பூமி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார் (ஏசாயா 65:17; 66:22ஐக் காணவும்). பேதுரு, பரலோகத்தை முன் எதிர்நோக்குதலில் இதே*

சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தினார் (2 பேதுரு 3:13).

மேலும், ஏவுதலினால் யோவான், தமது வாசர்களுக்கு நன்கு பழக்கமான சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். முதல் (பௌதீகரீதியான) படைப்பை மோசே, "... தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:1) என்று கூறியதன்மூலம் விவரித்திருந்தார். இப்போது இரண்டாவது (ஆவிக்குரியதான) படைப்பை யோவான், "புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்" என்று கூறுவதன் மூலம் விவரித்தார். ''வானத்தையும் பூமியையும்'' என்ற மோசேயின் சொற்றொடர், பௌதீகரீதியான (தற்காலிக) படைப்பு முழுவதையும் சுற்றிச்சூழ்ந்திருந்ததுபோலவே (நடபடிகள் 4:24; 17:24 ஆகியவற்றைக் காணவும்), ''புதிய வானமும் புதிய பூமியும்'' என்ற யோவானின் சொற்றொடரும் ஆவிக்குரிய (நித்திய) படைப்பில் உள்ள யாவற்றையும் சுற்றிச்சூழ்ந்துள்ளது.

"புதிய வானம்" மற்றும் "புதிய பூமி" என்ற சொற்றொடர்கள், இந்தத் தற்கால அண்டமானது நீக்கப்படும்போதுகூட, நாம் இருந்து செயல்படுவதற்குத் தகுதியான சூழ்நிலை ஒன்றிருக்கும் என்று நமக்கு உறுதிப்படுத்துகிறது. பவுலின் கூற்றுப்படி, உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நாம், உருவமற்ற ஆவிகளாய் இருக்க மாட்டோம், ஆனால் நமக்கு உடல்கள் - ஆவிக்குரிய உடல்கள் - அழிவற்ற உடல்கள், மகிமையுள்ள உடல்கள் கொடுக்கப்படும், ஆனாலும் அவைகள் உடல்களாகவே இருக்கும் (1 கொரிந்தியர் 15:35, 42-44; 2 கொரிந்தியர் 4:16-5:4).[14] ஆவிக்குரிய அந்த உடல்கள் வாழவும் செயல்படவும் ஒரு இடத்தைக் கொண்டிருக்க வேண்டும். பௌதீகரீதியான நமது உடல்களுக்கு பௌதீகரீதியான வானமும் பூமியும் தேவைப்படுவதுபோலவே, நமது ஆவிக்குரிய உடல்களுக்கு, ஆவிக்குரிய "வானமும் பூமியும்" தேவைப்படும். இயேசு, "(நான்) ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (யோவான் 14:2). ஆயத்தம் பண்ணப்பட்ட இந்த இடத்தைப் பரிசுத்த ஆவியானவர், "புதிய வானமும் புதிய பூமியும்" என்று அழைக்கின்றார்.

இருப்பினும், ''புதிய வானம்'' மற்றும் ''புதிய பூமி'' என்ற சொற்றொடர்களைப் பற்றியோ அல்லது இரு வட்டாரங்களுக்கு இடையில் இருப்பதாகக் கற்பனை செய்யப்படும் எந்த வித்தியாசம் பற்றியோ, அதிகம் கவலைப்பட வேண்டாம். லியோன் மோரீஸ் என்பவர், "புதிய எருசலேம் இறங்கிவந்த பின்பு, வானத்திற்கும் பூமிக்கும் வேறுபாடு இல்லாதிருப்ப தாகத் தோன்றுகிறது"[15] என்று கவனித்துள்ளார். G. B. கேயர்டு என்பவர், அந்த இடத்தில் ''இவ்விரண்டிற்கும் இடையில் வித்தியாசம் என்பது மறக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது" என்று கூறினார்.[16]

1ஆம் வசனத்தின் முடிவில் உள்ள பின்வரும் சொற்றொடர், கூடுதலான புதிராக உள்ளது: "சமுத்திரமும் இல்லாமற்போயிற்று'' (வசனம் 1ஆ).[17] வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் "சமுத்திரம்" என்ற கருத்தானது பிரிவு என்பதாக உள்ளது என்ற கோட்பாடு மிகவும் பிரபலமானதாக உள்ளது. மத்திய தரைக்கடல் யோவானை, ஆசியாவில் இருந்த அவரது

கிறிஸ்தவ நண்பர்களில் இருந்து பிரித்தது. அது போலவே, வெளிப்படுத்தின விசேஷத்தின் முற்பகுதியில், சிங்காசனத்திற்கு முன்பாகக் கடல் ஒன்று சித்தரிக்கப்பட்டிருந்தது (4:6), இது மனிதகுலத்தைத் தேவனுடத்தில் இருந்து பிரித்தது.[18] இப்போது அந்தக் கடல் இல்லாதொழிந்தது, தேவன் தமது மக்களுடன் வாசம்பண்ணுவார் என்று அறிவித்தார் (21:3).[19]

''சமுத்திரமும் இல்லாமற்போயிற்று'' என்ற வார்த்தைகள், புதிய வானமும் புதிய பூமியும் அடிப்படையாகவே *மாறுபட்டிருக்கும்* என்ற உண்மையை நாடகத்துவப்படுத்துதலை நோக்கம் கொண்டிருக்கலாம். நமது தற்போதைய பூமியானது முக்கால் பாகம் தண்ணீரால் ஆனது. இவ்வாறு இல்லையென்றால், நாம் அறிந்தவகையிலான உயிர் வாழ்வு என்பது இந்தப் பூமியின்மீது சாத்தியமற்றதாகிவிடும். இதற்குநேர்மாறாக, "புதிய பூமி" சமுத்திரத்தைக் கொண்டிருப்பதில்லை, அது தனிச்சிறந்ததாக இருக்கிறது. அது புதியதாக இருக்கிறது.

இது என்னை, நமது வசனப்பகுதியில் உள்ள வலியுறுத்தத்திற்கு திரும்பவும் கொண்டுவருகிறது: பரலோகத்தின் புதிய தன்மை. 1முதல் 8வரையுள்ள வசனப்பகுதியில் உள்ள "புதிய" என்ற வார்த்தை, "குணம் அல்லது வகையில் புதியது"[20] என்று அர்த்தப்படுகிற *kainos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யோவான் "அதே விஷயத்தின் புதிய பதிப்பைக் கண்ணோக்கி இருக்கவில்லை."[21]

### புதிய வாசஸ்தலம் (21:2அ)

யோவான், ''புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்'' என்று தொடர்ந்தார் (வசனம் 2அ). வெளிப்படுத்தின விசேஷத்தின் முற்பகுதியில், இயேசு (இதை), "என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரம்'' என்று குறிப்பிட்டிருந்தார் (3:12).[22]

புதிய ஏற்பாட்டில், "பழைய" (பூமிக்குரிய) எருசலேம் (பலஸ்தீனத்தில் உள்ள நகரம்), "புதிய" (வானத்திற்குரிய) எருசலேமுடன் பல முறைகள் நேர் எதிராக ஒப்பிடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுலின் தொடர் உருவகத்தில், ஆகார் என்பவள் "இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி; இவள் தன் பிள்ளைகளோடே கூட அடிமைப்பட்டிருக்கிறாளே, மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நாமெல்லாருக்கும் தாயானவள்" என்று அவர் கூறினார் (கலாத்தியர் 4:25, 26). மீண்டுமாக எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் யூதத்துவத்திற்கு மேலாகக் கிறிஸ்தவத்தின் மேன்மைத் தன்மையை வலியுறுத்தியபோது, அவர் பின்வருமாறு எழுதினார்,

> நீங்களோ [கிறிஸ்தவர்கள்] சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய

*சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ... வந்து சேர்ந்தீர்கள் (எபிரெயர் 12:22-24).*

*வெளிப்படுத்தின விசேஷத்தை யோவான் எழுதியபோது, அதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பாகவே, ''பழைய'' எருசலேம் ரோமா புரியாரால் அழிக்கப்பட்டிருந்தது; ஆனால் கிறிஸ்தவர்கள் ''புதிய'' எருசலேமை - "தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள" நித்திய நகரத்தை - முன்னெதிர்பார்த்து இருக்க முடிந்தது (எபிரெயர் 11:10; எபிரெயர் 13:14ஐக் காணவும்). அந்த நகரத்தைப் பற்றி 21:10-22:5ல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.*

*பரலோகத்தைப் பற்றி நாம் நினைக்கும்போது, சிறுநகரங்கள் மற்றும் நகரங்கள் ஆகியவற்றின் பயனுள்ள அம்சங்களைப் பற்றி நாம் நினைத்தாக வேண்டும். வில்லியம் ஹென்ரிக்ஸென் என்பவர், "ஒரு நகரம் என்பது நமக்கு நிரந்தரமான வசிப்பிடத்தை, மாபெரும் எண்ணிக்கையில் அங்கு குடியிருப்பவர்களை, பாதுகாப்பு மற்றும் பத்திரமாய் காத்துக்கொள்ளுதல், ஐக்கியம், அழகு ஆகியவற்றை நமது சிந்தைக்குக் கொண்டுவருகிறது"[23] என்று கூறினார். பரலோகம் என்பது தனிமைப்பட்டிருக்கும் இடம் அல்ல; நாம் வாழ்ந்து, ஊழியம் செய்து, மற்றவர்களுடன் இணைவு கொண்டிருப்போம்.*

*"புதிய எருசலேம்" என்பது "தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வருவதாக" சித்தரிக்கப்பட்டுள்ளது என்ற உண்மை, சிலருக்கு இது பூமியில் சபையைக் குறிக்கிறது என்பதற்கான ஆதாரமாக உள்ளது. "வானம் எப்படி வானத்தில் இருந்து இறங்கிவர முடியும்?'' என்று இவர்கள் கேட்கின்றனர்.[24] இவர்கள், இது ஒரு அடையாளத்துவமாக உள்ளது என்ற உண்மையின் கண்ணோட்டத்தை இழந்திருக்கின்றனர் என்பது உறுதி. "புதிய எருசலேம்" என்பது நேரடியான அர்த்தத்தில் வானத்தில் இருந்து பூமிக்கு இறங்கி வருவதில்லை. அது பழைய பௌதீகரீதியான பூமிக்கு இறங்கிவர முடியாது, ஏனெனில் அந்த பூமி அழிந்துபோகிறது. மற்றும், நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, ''புதிய வானம்'' மற்றும் ''புதிய பூமி'' ஆகியவற்றிற்கு இடையில் உள்ள எந்த வித்தியாசமும் விரைவில் சீர்குலைய வேண்டியதாக உள்ளன. "பரலோகத்தைவிட்டு இறங்கி வருதல்" என்ற வார்த்தைகள், திசையையோ அல்லது அடைவிடத்தையோ சுட்டிக்காண்பிப்பதையல்ல, ஆனால் தெய்வீகத் தொடக்கத்தைச் சுட்டிக்காண்பிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.[25] ''நித்திய ஆசீர்வாதம் பெற்ற நிலை என்பது மனிதனுடைய சாதனையல்ல ஆனால் தேவனிடத்தில் இருந்து வந்த ஈவாகவே உள்ளது.''[26]*

### *ஒரு புதிய சந்தோஷம் (21:2ஆ)*

*21ம் அதிகாரம் சபையைப் பற்றிப் பேசுகிறது,[27] ஆனால் இது, பூமியிலுள்ள சபையைப் பற்றிப் பேசுவது இல்லை. வெளிப்படுத்தின*

விசேஷத்தில், இடத்தையும் (பரலோகம்) மக்களையும் (சபை) வித்தியாசப்படுத்துதல் என்பது அடிக்கடி கடினமாக உள்ளது என்று நான் முன்பு குறிப்பிட்டேன். அந்த உண்மையை 2ம் வசனம் விவரிக்கிறது. யோவான், நகரத்தின் உருவகத்தைப் பயன்படுத்திய பின்பு இன்னொரு அடையாளத்திற்கு மாறிச்சென்றார்: அந்த நகரம் "தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" (வசனம் 2ஆ). சற்றுப் பிற்பாடு, இந்த நகரம் "ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி" என்று விவரிக்கப்படும் (வசனம் 9).

பவுல், சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டி என்று குறிப்பிட்டார் (எபேசியர் 5:22-32; 2 கொரிந்தியர் 11:2; ரோமர் 7:4ஐக் காணவும்). இயேசு, ''கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு" காலம் வரும் என்று அவர் (பவுல்) கூறினார் (எபேசியர் 5:27). 21:2ம் வசனம் "தேவனுடைய சபையைப் பற்றி ... இப்போது மகிமைப் படுத்தப்பட்டு தனது மீட்பருடன் பூரணத்துவமான ஐக்கிய உறவுக்கு ஆயத்தப்படுத்தப்படுகிறது'' என்பதைப் பற்றிப் பேசுவதாகப் பெரும் பான்மையான எழுத்தாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.[28]

19ம் அதிகாரத்தில் இருந்தே நாம், "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தை"யும் (19:7), "கலியாண விருந்தையும்" (19:9) முன்னெதிர் நோக்கிக்கொண்டு இருக்கின்றோம்.[29] கடைசியில் 21:2ல் நாம் அந்த வைபவ வேளைக்கு அழைத்துவரப்படுகின்றோம். யாரோ ஒருவர், ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணவேளைதான் ''பரலோகத்தில் மிகமிக மகிழ்ச்சிக்குரிய கணமாக" இருக்கும் என்று கூறியிருக்கின்றார்.

மணவாட்டி ''தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்படுதல்'' என்ற அடையாளத்துவம், சபையின் மகிமையைப் பற்றிப் பேசுகிறது. திருமண ஆராதனையைப் பல ஆண்டுகளாக நடத்தியிருப்பதில் நான், அழகற்ற மணமகளை ஒருக்காலும் கண்டதில்லை; மணமகளுக்குள்ளாக ஏதோ ஒன்று பிரகாசித்து அவளை மாற்றுவதுபோல் இருக்கிறது. மற்றும், திருமண உருவகமானது, இயேசு தமது சபையின்மீது தொடர்ந்து அன்புகூருதல் பற்றிப் பேசுகிறது.

### ஒரு புதிய நெருக்கம் (21:3, 7ஆ)

யோவான், ''மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக்[30] கேட்டேன்'' என்று கூறினார் (வசனம் 3அ). பேசுபவரின் அடையாளம் நமக்குக் கூறப்படவில்லை; இது நான்கு ஜீவன்களில் ஒன்றினிடத்திலிருந்து வந்திருக்கலாம்.[31] இந்தக் குரல், "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது" என்று கூறிற்று (வசனம் 3ஆ). இது வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களின் பாளையத்தினு டைய இருதயம் போன்ற மையப்பகுதியில் எழுப்பி நிறுத்தப்பட்டிருந்த ஆசரிப்புக் கூடாரத்தை நமக்கு நினைவூட்டுகிறது. ஆசரிப்புக்கூடாரம், இஸ்ரவேல் மக்களின் மத்தியிலே தேவன் இருக்கின்றார் என்பதற்கான ஒரு ஆதாரமாக இருந்தது.

*இந்தக் குரல் தொடர்ந்து, "அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடேகூட இருப்பார்"[32] என்று கூறிற்று (வசனம் 3இ).[33] 7ம் வசனத்தில் கர்த்தர் ''நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்'' என்று உறுதிப்படுத்தியன்மூலம் இந்தப் புதிய உறவின் நெருக்கத்தன்மைக்கு மறுவலிவூட்டினார் (வசனம் 7ஆ).[34]*

*இது இப்போது மகிழ்வுடன் அனுபவிக்கக்கூடிய, ஆனால் பரலோகத்தில் பூரணத்துவப்படுத்தப்படக்கூடிய ஒரு ஆசீர்வாதத்திற்கான மேன்மையான உதாரணமாக உள்ளது. விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக நாம் தேவனுடைய மகன்களாக, மகள்களாக ஆகின்றோம் (கலாத்தியர் 3:26, 27; 4:7). யோவான், "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" என்று எழுதினார் (1 யோவான் 3:1). நாம் இப்போது கர்த்தருடன் ஒரு விசேஷித்த உறவுமுறையை மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம், மற்றும் நாம் அவரது நெருக்கத்தையும் அன்பையும் பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால் பிற்பாடு - நாம் தேவனுடைய பிரசன்னத்தில் நிற்கையில், அவரது அன்பு நம்மைச் சூழ்ந்து மேற்கொண்டிருக்கையில் - அப்போது நாம், அவருடைய பிள்ளைகளாய் இருத்தல் என்பதன் அர்த்தத்தை உண்மையாகப் புரிந்துகொள்வோம்!*

### ***ஒரு புதிய மென்மை/உருக்கம்/பரிவு/மன நெகிழ்ச்சி (21:4)***

*இந்தப் புதிய நெருக்கத்தின் விளைவு என்னவாக இருக்கும்? முதலாவது தேவன், ''அவர்களுடைய (கண்களில் இருந்து) கண்ணீர் யாவையும் துடைப்பார்;[35] இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின" (வசனம் 4).*

*இந்த உலகத்தில் பாவம் பிரவேசித்த நாள் முதற்கொண்டு இதுவரையிலும் சிந்தப்பட்டுள்ள கண்ணீர் கடலைப் பற்றி நினைத்துப் பாருங்கள். பரலோகத்தில் தேவன், கண்ணீர் யாவையும் துடைப்பார்! (இதை ஒரு இளம்பெண் வாசித்தபோது, ''தேவன் ஒரு பெரிய கைக்குட்டையை வைத்திருக்க வேண்டும்" என்று கூறினாள்!) மூலவசனம் நேரடி அர்த்தத்தில், அவர் "அவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் யாவையும் துடைப்பார்'' என்றுள்ளது. தேவன் நமது கண்ணீரைத் துடைப்பது மட்டுமின்றி, கண்ணீருக்குக் காரணமானவற்றையும் நீக்கிப் போடுவார்.*

*மரணம்தான் நமது கண்ணீர்களுக்கு மூல ஆதாரமாக இருக்கிறது. நம்மில் பெரும்பான்மையானவர்கள், திறந்த கல்லறைகளில் அருகில் நின்று, நமக்கு அன்பான சிலருக்குப் பிரிவுசொல்லியுள்ளோம். பரலோகத்தில், ''இனி மரணம் எதுவும் இராது'' (20:14ஐக் காணவும்). இவ்விதமாக ஆதியாகமம் 3ன் சாபம் விலக்கப்படும் (ஆதியாகமம் 3:3, 19ஐக் காணவும்)!*

*"முந்தினவைகள் ஒழிந்துபோயின" என்பதால், "இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை." இந்த உலகத்தில்*

பாவம் பிரவேசித்த நாள்முதற்கொண்டு நமது வாழ்வைப் பாழாக்கிய ஒவ்வொன்றும் இல்லாதொழிந்துவிடும்.

4ம் வசனம் பரலோகத்தை நேர்மறைச் சொற்றொடர்களுக்குப் பதிலாக எதிர்மறைச் சொற்றொடர்களில் விவரிக்கக் காரணம் என்ன? ஒருவேளை, இந்த வாக்குத்தத்தங்களை மக்கள் அடையாளம் கண்டுகொள்வதற்காக இவ்வாறு விவரிக்கப்பட்டிருக்கலாம். ஒவ்வொருவரும் சந்தோஷத்தை அறிந்திருப்பது இல்லை, ஆனால் எல்லாரும் துக்கத்தை அறிந்திருக் கின்றோம். சிலர் ஒருக்காலும் சிரித்திருப்பதில்லை, ஆனால் எல்லாரும் அழுதிருக்கின்றோம். சிலர் ஒருக்காலும் வேதனையில் இருந்து விடுதலை யானதில்லை, ஆனால் துன்புறுதல் என்றால் என்ன என்பதை எல்லாரும் அறிந்திருக்கின்றோம். வியாதியும் கவலையும் கடந்துபோன விஷயங்களாக இருக்கும் மற்றும் நித்திய சந்தோஷத்தை ஒவ்வொருவரும் அறியக்கூடிய வகையில் இருக்கும் ஒரு இடம் உள்ளது என்பதை அறிதல் ஆச்சரியமானதாக இருப்பதில்லையா?

4ம் வசனத்தில் உள்ள ஆசீர்வாதங்களில் ஒன்றே ஒன்று மட்டும் உண்மையாக உள்ள ஒரு தீவு - கண்ணீர்கள், மரணம் அல்லது வேதனை எதுவும் இல்லாத ஒரு இடம் - ஒன்று இந்த பூமியில் உள்ளது என்று மக்களை நான் நம்பவைக்க முடிந்தது என்றால், அவர்கள் அந்தப்புகலிடத்திற்குச் செல்லத் தங்களுக்கு உரிய எல்லாவற்றையும் விற்றுப்போடுவார்கள். இந்த வாக்குத்தத்தங்கள் யாவும் உண்மையாக உள்ள ஒரு இடம் இருந்தும்கூட, பலர் அங்கு செல்வோமா இல்லையா என்பதுபற்றி எவ்வித மாறுபாட்டையும் காண்பிக்காமல் நிலைத்திருப்பது எவ்வளவு வினோதமாயிருக்கிறது!

### ஒரு புதிய மனநிறைவு (21:6இ)

3 மற்றும் 4ம் வசனங்களின் வாக்குத்தத்தங்களுடன், 6ம் வசனத்தின் வாக்குத்தத்தம் நெருங்கிய வகையில் உறவுபட்டுள்ளது. தேவன் பரலோகத்தில் ஒவ்வொரு தேவையையும் சந்திப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார்: “தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்” (வசனம் 6இ).[36]

இந்த வாக்குத்தத்தத்தை மதித்து உணருவதற்கு வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் வாசகர்களின் இடத்தில், நீங்கள் உங்களையே வைத்துப்பார்க்க வேண்டும்: சூழ்நிலை வறட்சியாக இருந்தது; தண்ணீர் மிகவும் அரிதாக கிடைத்தது மற்றும் அது விலைமதிப்பான பொருளாக இருந்தது. அந்த நாளில், பூமியில் இருந்து பொங்கிப்பெருகும் குளிர்ச்சியான மற்றும் புத்துணர்வூட்டும், வற்றாத நீரூற்று ஒன்றின் விவரிப்பைக் காட்டிலும் வேறு எதுவும், மனிதனின் ஆவிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவனுடைய ஆச்சரியமான அளிப்பிற்குச் சிறந்த விவரிப்பாக இருந்திருக்க முடியாது.

வேதாகமத்தில் தாகம் என்பது, மனிதனுக்குள் இருக்கிறதான, மிகத்தூய்மையான, மிக மேலானதான மற்றும் மாபெரும் விஷயத்திற்கான ஏக்கத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது (சங்கீதம் 36:9; 42:1; 63:1

*ஆகிய வசனங்களைக் காணவும்). இயேசு, ‘‘நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்’’ என்று கூறினார் (மத்தேயு 5:6). அவர் “ஜீவத் தண்ணீரை”க் (யோவான் 4:10; யோவான் 7:37ஐ காணவும்) கொண்டு மக்களை திருப்தியடையச் செய்வதாக வாக்களித்தார். இந்த வாழ்வில் நமது ஆவிக்குரிய தாகம் ஒருபகுதி தீர்த்து வைக்கப்படுகிறது, ஆனால் இனிவரும் வாழ்வில், இயேசு நம்மை “ஜீவத் தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்தும்” போது (7:17) அந்தத் தாகம் முற்றிலுமாக நிறைவாக்கப்படும். அப்போது நாம், “தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்படுகிற பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி” அருகில் இளைப்பாறுவோம் (22:1).*

*தேவனுடைய அளிப்புகள் “விலையெதுவும் இல்லாதவை” என்பதைக் கவனியுங்கள். ஜோ ஜோன்ஸ் என்பவர், ‘‘அவைகள் மனிதருடைய பகுதியில் ‘விலைசெலுத்தத் தேவையற்றவைகளாய்’ இருக்கின்றன, ஏனென்றால் நாம் அவற்றைப் பெறத்தகுதிப்படும்படி ஒருக்காலும் எதையும் ஈட்ட இயலாது’’[37] என்று கருத்துத் தெரிவித்தார். சில விஷயங்களை உலகத்தின் மிகப்பெரிய செல்வந்தரால்கூட வாங்க இயலாது; பரலோகம் என்பது அப்படிப்பட்ட விஷயங்களில் ஒன்றாக இருக்கிறது. தேவனுடைய அற்புதமான கிருபைக்காக அவருக்கு நன்றி!*

***ஒரு புதிய உத்தரவாதம் (21:5ஆ, 6அ, ஆ)***

*இந்த அற்புதமான ஆசீர்வாதங்கள் நிச்சயமானவைகள் என்பதை நாம் எவ்வாறு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்? யோவானிடத்தில் கர்த்தர், ‘‘இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது’’[38] என்று கூறினார் (வசனம் 5ஆ; எபிரெயர் 6:18; 2 தீமோத்தேயு 2:13 ஆகியவற்றைக் காணவும்). நாம், தேவன் கூறுகின்றவற்றைச் சார்ந்திருக்க முடியும்!*

*தொடர்ந்து கர்த்தர், “ஆயிற்று” என்றுரைத்தார் (வசனம் 6அ). நேரடி அர்த்தத்தில் இவ்வசனம் “அவைகள் செய்யப்பட்டாயிற்று” - அதாவது, தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்த ஒவ்வொன்றும் நிறைவேற்றப் பட்டாயிற்று - என்றே கூறுகிறது. அவரது வாக்குத்தத்தங்கள் “செய்யப்பட்டாயிற்று” என்று கருதப்படும் அளவுக்கு அவைகள் நிச்சயமானவைகளாய் இருக்கின்றன.*

*எதிர்காலம் குறித்து நாம் நிச்சயமுள்ளவர்களாய் இருக்க முடிவது ஏன்? ஏனென்றால் தேவன் நித்தியமானவராக இருக்கின்றார். அவர், “நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்” என்று கூறினார் (வசனம் 6ஆ).[39] “அல்பா” மற்றும் “ஒமேகா” என்பவை கிரேக்க அகரவரிசை எழுத்துக்களுடைய முதல் மற்றும் கடைசி எழுத்துக்களாக உள்ளன.[40]*

A Ω

*இதே சொற்றொடர், வெளிப்படுத்தின விசேஷத்தின் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது (1:8; 1:17; 3:14 ஆகிய வசனங்களையும்*

*காணவும்). அங்கு அது, கர்த்தர் ரோமாபுரி நிலவுவதற்கு முன்பே இருந்தார் மற்றும் ரோமாபுரியின் அழிவுக்குப் பின்னரும் நீண்டகாலம் இருப்பார் என்ற சிந்தனையை அடிக்கோடிட்டது.[41] இங்கு அது, கர்த்தர் எதைத் தொடங்குகின்றாரோ, அதை அவர் முடித்து வைப்பார் என்பதை வலியுறுத்துகிறது. அவர் வாக்குத்தத்தம் செய்ததை அவர் நிறைவேற்றுவார்.[42] செயல் விளைவில் தேவன், தமது வாக்குத்தத்தங்களின் மீது தமது கையெழுத்தை இட்டார் (22:13ஐக் காணவும்).[43]*

***ஒரு புதிய பரிசுத்தத் தன்மை (21:7அ, 8)***

*இவ்வசனப்பகுதியானது, நமது சிந்தைகள் எதிர்காலத்தை முன்னெதிர் நோக்கக் காரணமாகின - ஆனால் அடுத்த வசனமானது நம்மை நிகழ் காலத்திற்கு உடனடியாகப் பின்னால் கொண்டு வருகிறது: "ஜெயங் கொள்ளுகிறவன்[44] எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்[45]; ..." (வசனம் 7அ). இனிவரும் வாழ்வைக் குறித்த, வெறும் ஆர்வத்தைத் திருப்திப் படுத்துதல் என்பதல்ல, ஆனால் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துதல் என்பதே பரிசுத்த ஆவியானவரின் நோக்கமாயிருந்தது.*

*"ஜெயங்கொள்ளுகிறவன் [அல்லது ஜெயங்கொள்ளுகிறவனுக்கு]" என்ற சொற்றொடர் நமக்கு நன்கு பழக்கமானதாகவே உள்ளது, ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் இச்சொற்றொடர் திரும்பத் திரும்ப பயன்படுத்தப்பட்டது (2:7, 11, 17, 26; 3:5, 12, 21).[46] 21:7ல் இதன் பயன்பாடு மற்ற வாக்குத்தத்தங்களைச் சுற்றிச் சூழ்ந்துள்ளது. செயல்விளைவில் கர்த்தர், "நீ இந்த வாக்குத்தத்தங்களை மகிழ்வுடன் அனுப விக்க விரும்பினால், நீ ஜெயங்கொள்ளுகிறவனாக இருக்க வேண்டும். நீ மரணபரியந்தம் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும்" என்று கூறுகின்றார் (2:10).*

*ஜெயங்கொள்வதற்குப் பதிலாக ஒருவர் - தப்பிதத்தினால், சோதனையினால், பயமுறுத்தப்படுதலினால் - ஜெயங்கொள்ளப்பட்டால் என்னவாகும்? 8ம் வசனம், உண்மையற்றவர்களின் அடைவிடத்தைப் பற்றி பதிவுசெய்கிறது:*

> *பயப்படுகிறவர்களும்,[47] அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிர காராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடை வார்கள்.*

*இவ்வசனமானது, கர்த்தருக்குப் பற்றுறுதியுடன் நிலைத்திருப்பதா இல்லையா என்று முடிவுசெய்ய வேண்டியிருந்த முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு விசேஷித்த நடைமுறைப்பயன்பாட்டைக் கொண்டிருந்தது: "பயப்படுகிறவர்கள்" என்போர், துன்புறுத்தப்படுதல் பற்றிய தங்கள் பயம் தங்களை மேற்கொள்வதற்கு அனுமதித்தவர்களாய் இருந்தனர் (2:10ஐக் காணவும்). "அவிசுவாசிகள்" என்போர் தாங்கள் விழுந்து போவதினின்று காத்துக்கொள்ளப் போதிய அளவு பலமான விசுவாசத்தைக் கொண்டிராத*

*வர்களைக் குறித்தது (14:12). ‘‘அருவருப்பானவர்கள்’’ என்போர், மகாபாபிலோனின் “அருவருப்புகளில்” பங்கேற்றவர்களாய் இருந்தனர் (17:4, 5).[48] “கொலைபாதகர்” என்போர், உண்மையுள்ள கிறிஸ்தவர்களின் மரணத்தில் பங்காற்றியவர்களை உள்ளடக்கியிருந்தனர் (16:6; 17:6; 18:24).[49] விபசாரமும் (ஒழுக்கவீனமும்) சூனியமும் விக்கிரகாராதனையுடன்[50] இணைவுகொண்டிருந்தன - இவை விசேஷமாக, இராயனின் உருவச்சிலைகளுக்கு முன்பாகப் பணிந்து கொண்டவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன (2:14, 20, 21; 9:21; 14:8). “பொய்யர்” என்பது, இயேசு தேவனுடைய குமாரன் என்பதை மறுத்து, தேவனுடைய மனதைப் புண்படுத்துபவர்களுக்கு அடைமொழியாக இருந்தது (14:5ஐக் காணவும்).*

*பொதுவான நடைமுறைப் பயன்பாடுகளையும் ஏற்படுத்த முடியும். இந்தப் பாவங்கள் இன்றைக்கும் நம்மை வாதிக்கத் தொடருகின்றன. இவற்றிற்கு எதிராக நாம் நம்மைக் காத்துக்கொள்வது அவசியமாக உள்ளது.[51]*

## *முடிவுரை (21:5அ)*

*நமது வசனப்பகுதியின் மைய வாக்குத்தத்தம் எவ்வளவு அற்புதமானதாக உள்ளது: “சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர், ‘இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்’ ” (வசனம் 5அ)!*

*இந்த வாக்குத்தத்தம் நிகழ்கால வினைச்சொல்லில் அமைந்துள்ளது. தேவன் ஏற்கனவே ஏராளமானவற்றைப் புதிதாக்கியுள்ளார்! நாம் ஒரு “புதிய கட்டளையுடன்” (யோவான் 13:34) ஒரு புதிய உடன்படிக்கையைப் பெற்றுள்ளோம் (2 கொரிந்தியர் 3:6; எபிரெயர் 8:8, 13; 9:15; 12:24). கிறிஸ்துவுக்குள், நாம் புதுசிருஷ்டியாய் இருக்கின்றோம் (2 கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 6:15; எபேசியர் 4:24; கொலோசெயர் 3:10 ஆகியவற்றைக் காணவும்). நாம் “புதிதும் ஜீவனுள்ளதுமான மார்க்கத்தில்” இருக்கின்றோம் (எபிரெயர் 10:20). ஆயினும், ஒரு நாளிலே சகலமும் புதிதாக்கப்படும்! இது உங்களை பரலோகம் செல்ல விரும்பும்படியாக்கவில்லையா? இது உங்களைப் பரலோகம் செல்ல ஏங்கும்படி செய்யவில்லையா?*

*பரலோகம் என்பது ஆயத்தமாக உள்ள மக்களுக்கு ஆயத்தம் செய்யப்பட்ட இடமாக உள்ளது. நீங்கள் பரலோகம் செல்ல ஆயத்தமா யிருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மூலமாக கர்த்தருடைய இரக்கத்தையும் கிருபையையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றீர்களா? (மத்தேயு 7:21)? நீங்கள் உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பியிருக்கின்றீர்களா (லூக்கா 13:3)? நீங்கள் ஞானஸ்நானத்தின் மூலம் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தி யிருக்கின்றீர்களா (மாற்கு 16:16)? நீங்கள் ஏற்படுத்திய உறுதிப்பாட்டிற்கு உண்மையுள்ளவராக நிலைத்திருக்கின்றீர்களா (வெளிப்படுத்தின விசேஷம் 2:10)? இந்த உலகத்தின் கவலைகளும் அழுத்தங்களும் உங்கள் இருதயத்தில் இருந்து அன்பைத் தூர்த்துப்போகச் செய்யும்படிக்கு நீங்கள் அனுமதித்தது சாத்தியமாக உள்ளதா?(மத்தேயு 13:21, 22ஐக் காணவும்.)*

*ஒரு மனிதர் பரலோகத்தை இழந்திருந்தால், அவர் இவ்வுலகத்தில் சாதிக்கின்ற எதுவும் எந்த அர்த்தமும் தருவதில்லை; கடைசியில், "நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியனே" என்ற வார்த்தைகளைக் கேட்காத எந்த ஒரு மனிதரின் வாழ்வும் தோல்வியானதாகவே இருக்கும். நீங்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர் ஆகத் தேவையானால் அதை இன்றே செய்யுங்கள்!*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், முதல் பிரதானக் கருத்தில் உள்ள எல்லா விஷயங்களையும் எடுத்துரைத்தல் என்பது உங்களுக்கு அவசியமற்றதாக இருக்கும். இருப்பினும், நீங்கள் விஷயங்களைப் பயன்படுத்த முடிவுசெய்தால், நீங்கள் "இப்போது" மற்றும் "அப்போது" என்ற தலைப்புகளின்கீழ், சபையையும் பரலோகத்தையும் (வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், பூமியின்மீது இராஜ்யத்தையும் பரலோகத்தில் இராஜ்யத்தையும்) ஒப்பிடும் வகையில் ஒரு வரைவட்ட வணையைத் தயாரிக்க விரும்பலாம். முதல் பத்தியில், இப்போது சபையில் மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகிற ஆசீர்வாதங்களைப் பட்டியலிடும் வேளையில், இரண்டாவது பத்தியில் அந்த ஆசீர்வாதங்கள் பரலோகத்தில் முழுமையாக நிறைவாக உய்த்துணரப்படும் என்பதைக் காண்பிக்க முடியும்.*

*பரலோகத்தைப் பற்றிய பிரசங்க கருத்துக்களுக்குப் பொதுவாகவோ[53] அல்லது நமது வசனப்பகுதியில் குறிப்பாகவோ பஞ்சம் எதுவும் இல்லை. அதுபோலவே சாத்தியக்கூறான தலைப்புகளுக்கும் பஞ்சமில்லை: "புதிய வானமும் புதிய பூமியும்"; "ஆயிற்று"; "புதியவற்றைப் பற்றிய வாக்குத்தத்தம்"; "உண்மையான 'புது யுகம்.' " நீங்கள் KJV வேதாகமத்தைப் பயன்படுத்தினால், ஒரு பிரசங்கத்திற்கு "No More" என்று தலைப்பிட முடியும்.*

*நமது வசனப்பகுதியின் சிறு துணுக்குகள் பாடங்களுக்கு அடிப்படையாகப் பயன்பட முடியும். "நரகத்தில் இருப்பவர்கள் யார் யார்?" என்பது பற்றிப் பிரசங்கிக்க 21:8ஐ நீங்கள் பயன்படுத்த முடியும். "பரலோகத்தில் இராத விஷயங்கள்" என்பது பற்றிய பாடத்திற்குத் தொடக்கக் கருத்தாக 21:4ஐ நீங்கள் பயன்படுத்த முடியும் (21:1, 22, 23, 27; 22:3, 5 ஆகிய வசனங்களைக் காணவும்).*

*விருப்பப்பட்டால், 21 மற்றும் 22 ஆகிய அதிகாரங்கள் ஒன்றாகப் படிக்கப்பட முடியும். இதற்கு வயர்ஸ்ப் என்பவர் பின்வரும் வரைக்குறிப்பைக் கொடுத்துள்ளார்: (1) நகரத்தின் குடிமக்கள் (21:1-8); (2) நகரத்தின் பண்பு (21:9-22:9); (3) நகரத்தின் அறைகூவல் (22:6-21).*

குறிப்புகள்

*[1]1:8ல் தேவன் பேசியிருக்கலாம். ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "எதுவரைக்கும் கர்த்தாவே?" என்ற பாடத்தில் 49ம் வசனத்திற்கான குறிப்புகளைக் காணவும்.) 16:1 மற்றும் 16:17ல் அவர் அனேகமாகப் பேசினார். ("வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் "தேவன் நினைவுகூரும்போது" மற்றும் "நமது இடர்ப்பாடுகளுக்குத் தேவன்மீது குற்றம் சுமத்துதல்" ஆகிய பாடங்களைக் காணவும்.)* [2]Batsell Barrett Baxter, *If I Be Lifted Up* (Nashville: Gospel Advocate Co., 1956), 115. *[3]ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குமுன் இரண்டாம் வருகை கொள்கைக்காரர்கள் இன்னொரு விளக்கத்தையும் கொண்டுள்ளனர்: வெளிப்படுத்தின விசேஷம் 21, 22ன், "புதிய எருசலேம்" என்பது, கற்பனைசெய்யப்பட்டதான கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கென்று ஆயத்தமாய்ப் புதுப்பிக்கப்பட்ட பூமிக்குரிய பலஸ்தீனத்து நகரமாயிருக்கும். "எருசலேம்" என்பது, நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றால், 21:16ல் உள்ள அளவீடுகள் அவ்வாறே எடுத்துக் கொள்ளப்படவேண்டும் - இருப்பினும் பலஸ்தீனம், 150 மைல்கள் நீளமும் 70 மைல்கள் அகலமும் கொண்டது, அதில், 1500 சதுர மைல்கள் கொண்ட நகரம் இருக்க இடமில்லை! [4]மீண்டுமாக வெளிப்படுத்தின விசேஷம் 21:1-22:5 வரையுள்ள வசனப்பகுதியானது இன்றைய நாட்களில் பூமியில் உள்ள சபையைச் சித்தரிக்கிறது என்று நம்புகிறவர்கள் எதிர்காலத்தில் ஒரு நாளில் கடைசிநியாயத்தீர்ப்பு இருக்கும் என்றும் அதைத்தொடர்ந்து துன்மார்க்கர் நித்திய நரகத்திற்கும் நீதிமான்கள் என்றென்றைக்குமான பரலோகத்திற்கும் செல்வார்கள் என்பதை ஒப்புக்கொண்டிருக்கும்வரை, அவர்களுடன் எனக்குக் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை என்பதைக் தெரிவித்துக் கொள்கின்றேன்.* [5]Daniel Russell, *Preaching the Apocalypse* (New York: Abingdon Press, 1935), 235. [6]Harold Hazelip, *The Lord Reigns: A Survey of the Book of Revelation* (Abilene, Tex.: Herald of Truth, n.d.), 22. [7]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 404. [8]Ibid., 405-6. [9]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 122. *[10]தேவனுடைய இராஜ்யம் பற்றி ஒரு பொதுவான கலந்துரையாடலுக்கு இந்தப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "கிறிஸ்துவுடன் ஆளுகை செய்தல்!" என்ற பாடத்தில் காணவும். சபை என்பதே இராஜ்யமாக உள்ளது என்ற உண்மையைப் பற்றி நமது படிப்புகளில் பலமுறை கலந்துரையாடியிருக்கின்றோம். எபிரெயர் 12:22-24, இராஜ்யத்தின் பூமிக்குரிய மற்றும் வானத்திற்குரிய அம்சங்களை ஒன்றிணைக்கும் வசனப்பகுதியாக உள்ளது.*

*[11]புதிய ஏற்பாட்டில் நீங்கள் "தேவனுடைய இராஜ்யம்" அல்லது "பரலோக இராஜ்யம்" என்ற சொற்றொடரைப் பார்க்கும்போது, அவ்வார்த்தைகள் சபையைக் குறிக்கின்றனவா அல்லது பரலோகத்தைக் குறிக்கின்றனவா என்பதை நீங்கள் எவ்வாறு அறிய முடியும்? சந்தர்ப்பப்பொருளின் மூலமாகவே நீங்கள் அர்த்தத்தை முடிவுசெய்ய இயலும். சிலவேளைகளில், பூமிக்குரிய இராஜ்யமா (சபை) அல்லது பரலோக இராஜ்யமா (பரலோகம்), எது அர்த்தப்படுத்தப்படுகிறது என்பதைக் கூறுவது கடினமாக இருந்ததென்றால், அது இவ்விரண்டிற்கும் இடையில் உள்ள நெருங்கிய பிணைப்பிற்கான இன்னொரு சுட்டிக்காட்டுதலாக உள்ளது. [12]1ம் வசனத்தில் உள்ள "வானம்" என்ற சொற்றொடர் தேவனுடைய வாசஸ்தலத்தைக் குறிப்பதில்லை. அந்த வானம் ஒரு புதிய வானத்தினால் இட்டு நிரப்பப்படும்படி ஒழிந்துபோகவில்லை. மாறாக, பாடத்தில் உரைக்கப்பட்டபடி, "வானம்" என்ற சொற்றொடர் இவ்விடத்தில், பழைய (பௌதீகரீதியான) படைப்புடன் நேர்*

எதிராக ஒப்பிடப்படும் புதிய (ஆவிக்குரிய) படைப்பாக உள்ளது. [13]"புதிய பூமி" என்பது பௌதீகரீதியானதாயிராது என்ற உண்மை பற்றிய கலந்துரையாடல் ஒன்று பின்வரும் புத்தகத்தில் காணப்படுகிறது; Hugo McCord, *The Royal Route of Revelation* (Nashville: 20th Century Christian, 1976), 49. [14]இல்லை, நான், ஒரு மனிதனின் ஆவிக்கும் அவருக்குக் கொடுக்கப்படும் ஆவிக்குரிய உடலுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அறிவதில்லை, மாம்சத்தில் இருக்கும் நிலையில் என்னால் ஆவிக்குரிய வட்டாரத்தைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. இருப்பினும் பவுலின் கூற்றுப்படி, வேறுபாடு ஒன்றிருக்கும். [15]Leon Morris, *Revelation*, rev. ed., The Tynadale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 237. [16]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine,* (London: Adam & Charles Black, 1966), 263. [17]இந்த வார்த்தைகள் 20 அதிகாரத்தைக் குறிப்பிடலாம். 20:13ல், "சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன." மரணமும் பாதாளமும் இனியும் தேவையில்லை என்பதால், அவைகள் நீக்கப்பட்டன (20:14). 21:1ன் முடிவுப்பகுதியானது, "கடலும்" (சமுத்திரமும்) நீக்கப்பட்டது என்று வலியுறுத்துதலின் பின்தொடர்ச்சியாக மாத்திரம் இருக்கலாம். [18]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "விஷயங்களைக் கருத்துநோக்கில் வைத்தல்" என்ற பாடத்தில் 4:6க்கான குறிப்புகளைக் காணவும். [19]கடல் என்பது யோவானின் நாட்களில் மக்களால், பயங்கரத்தின் ஆதாரமூலமாகக் கருதப்பட்டது என்று பல எழுத்தாளர்கள் வலியுறுத்துகின்றனர் (சங்கீதம் 107:25-28; ஏசாயா 57:20; எசேக்கியேல் 28:8 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்). "சமுத்திரம் காணப்படவில்லை" என்ற சொற்றொடரை, உண்மையுள்ளவர்களின் நித்திய வாசஸ்தலத்தில் பயங்கரம் நீக்கப்பட்டிருக்கும் என்று அர்த்தப்படுத்துவதாக விளக்குகின்றனர். [20]Frank Pack, *Revelation*, Part 2, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 61. "புதியது" என்பதற்கு *neos* என்ற இன்னொரு கிரேக்க வார்த்தை உள்ளது, இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் காணப்படுவதில்லை.

[21]Morris, 236. [22]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும், "தன்னிடத்தில் உள்ளவற்றைக் கொண்டு தன்னால் முடிந்தவற்றைச் செய்திருந்த சபை" என்ற பாடத்தில் 3:12க்கான குறிப்புகளைக் காணவும். [23]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 240. வேதாகமத்தில் ஒரு நகரம் பற்றிய குறிப்பு முதன்முதலாக ஆதியாகமம் 4:17ல் காணப்படுகிறது. [24]பதிலுக்கு நாம், " 'ஸ்தலம்' (பரலோகம்) என்பது ஏற்கனவே இருக்கும் நிலையில், இயேசு 'ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப்போவதாக' (யோவான் 14:2) கூறியது ஏன்?" என்று கேட்கலாம். உண்மையுள்ளவர்களுக்கு அளிப்புகள் ஏற்படுத்தப்படும் என்பதை மாத்திரம் இயேசு வலியுறுத்தினார். அதுபோலவே தேவன் தமது மக்களுக்கு (சபைக்கு) ஒரு ஸ்தலத்தை (பரலோகத்தை) ஆயத்தம் செய்திருக்கின்றார் என்பதை வெளிப்படுத்தின விசேஷம் 21:2 வலியுறுத்துகிறது. [25]வெளிப்படுத்தின விசேஷத்தில், "பரலோகத்தில் இருந்து இறங்கி வருதல்" என்ற வார்த்தைகள், தெய்வீகத் தொடக்கம் கொண்டுள்ளது என்பதை முதன்மையாக வலியுறுத்துகின்றன (10:1; 16:21; 18:1; 20:1, 9 ஆகிய வசனங்களைக் காணவும்). [26]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 378. [27]21, 22 அதிகாரங்களில் காணப்படும் மகிமையுள்ள சபையின் மீதான வலியுறுத்தமானது, கிறிஸ்தவ யுகத்தில் மீட்கப்பட்டவர்கள் மாத்திரமே பரலோகத்தில் இருப்பார்கள் என்று குறிப்பிடுவது இல்லை. இந்தப் புத்தகத்தின்

பிற்பகுதியில் காணப்படும் ''ஆத்துமாவின் இல்லம்'' என்ற பாடத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 21:12ன் மீதான குறிப்புகளைக் காணவும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த உண்மையுள்ளவர்களும் அங்கிருப்பர் என்று மற்ற வசனப்பகுதிகள் வலியுறுத்துகின்றன. (எடுத்துக்காட்டாக, எபிரெயர் 11:39, 40.) இருப்பினும், துன்புறுத்தப்பட்ட சபையாரை ஊக்கப்படுத்துதல் என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் நோக்கமாய் இருந்தபடியால், வெற்றிகொண்ட சபை என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களின் கவனத்தினுடைய மையமாக உள்ளது. [28]Alfred Plummer, "The Revelation of St. John the Divine," *The Pulpit Commentary,* vol. 22, *Epistles of Peter, John & Jude, The Revelation,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 510. [29]இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் ''ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து'' என்ற பாடத்தில் காணவும். [30]ஒவ்வொருவரும் கேட்கக்கூடும்படி, பேசியவர் உரத்த சத்தத்தைப் பயன்படுத்தினார். இது, யோவான் பெருஞ்சத்தத்தைக் கேட்ட இருபது அல்லது அதற்கு சற்றேறக்குறைய உள்ள எண்ணிக்கையில் கடைசி முறையாக உள்ளது.

[31]பேசியவர் தேவனுக்காகப் பேசினார். ஆனால் தேவன் படர்க்கைப் பெயரில் பேசப்பட்டதால், கர்த்தரே பேசுபவர் அல்ல என்பதுபோல் தோன்றும். [32]கிரேக்க வசனத்தில் ''மக்கள்'' (பன்மை) என்றுள்ளது. இது, ''எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்'' என்பதை (நடபடிகள் 10:35) வலியுறுத்தும் நோக்கம் கொண்டிருக்கலாம். [33]இந்த வாக்குத்தத்தத்தை லேவியராகமம் 26:12 மற்றும் எசேக்கியேல் 36:28 ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும். [34]2 கொரிந்தியர் 6:17, 18ஐக் காணவும். [35]கண்ணீர் யாவும் துடைக்கப்படும் என்ற வாக்குத்தத்தம் முன்பு 7:17ல் கொடுக்கப்பட்டது. "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற பாடத்தில் 7:17க்கான குறிப்புகளைக் காணவும். [36]6இ வசனப்பகுதியை ஏசாயா 55:1 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [37]Joe D. Jones, *Victory in Jesus* (Searcy, Ark.: By the author, 1990), 305. [38]"எழுது" என்று யோவானுக்கு இந்தப் புத்தகத்தில் பலமுறை அறிவுறுத்தப்பட்டது. (அவ்வாறு அறிவுறுத்தப்பட்ட) ஒவ்வொரு முறையும், வழக்கத்திற்கு மாறான தனிச்சிறப்புள்ளவை நடந்திருந்தன அல்லது வெளிப்படுத்தப்பட இருந்தன. இவ்வேளையில், யோவான் தாம் கேட்டது மற்றும் கண்டது குறித்துத் திகைப்படைந்தபடியால் அவர் தமது எழுதுதலில் தாமதித்திருக்கலாம் என்று சிலர் நம்புகின்றனர். [39]"நான்" என்ற வார்த்தை கிரேக்க மொழியில் வலியூட்டமுள்ளதாக இருக்கிறது: ''நான் அல்பாவும் ஒமேகாவுமாயிருக்கிறேன்." [40]அல்பா மற்றும் ஓமேகா பற்றி நீங்கள் முன்பே ஒரு வரைவட்டவணை ஏற்படுத்தியிருந்தால், திரும்பவும் அதைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் விரும்பலாம்.

[41]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில், 1:8க்கான குறிப்புகளுக்கு "எதுவரைக்கும் ஆண்டவரே?" என்ற பாடத்திலும், 1:18க்கான குறிப்புகளுக்கு "கர்த்தர் அறிகின்றார்" என்ற பாடத்திலும் காணவும். மற்றும் "வெளிப்படுத்தின விசேஷம், 2'' என்ற புத்தகத்தில் 3:14க்கான குறிப்புகளுக்கு, ''தன்னை ஏற்படுத்தியிருந்த சபை" என்ற பாடத்தில் காணவும். [42]The last two sentences were adapted from D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, 1961), 94. [43]"அல்பாவும் ஓமேகாவும்" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ள மூன்று இடங்களில் (1:8; 21:6; 22:13), சிலவேளைகளில் இவ்வார்த்தைகள் பிதாவைக் குறிப்பது போலவும், சில வேளைகளில் குமாரனைக் குறிப்பது போலவும் காணப்படுகிறது. இருவரும் அவ்வளவு நெருக்கமாக

*இருப்பதால், குறிப்பிட்ட வசனப்பகுதியில் இந்தச் சொற்றொடர் யாரைக்குறிக்கிறது என்பது சிறிதளவு வேறுபாட்டையே ஏற்படுத்துகிறது.* [44]*"ஜெயங்கொள்ளுகிறவன்" (நிகழ்கால வினைச்சொல்) தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. இது "ஜெயித்துக் கொண்டிருப்பவர்கள்" என்று மொழிபெயர்க்கப்படக்கூடும். பாவத்தை ஜெயங்கொள்ளுதல் என்பது வாழ்நாள் முழுவதற்குமான போராட்டமாக உள்ளது.* [45]*"சுதந்தரித்துக் கொள்ளுதல்" என்ற வார்த்தை ... ஒரு பங்கைப் பெற்றுக்கொள்ளுதல், குறிப்பாக ஒரு உடைமையைப் பெற்றுக்கொள்ளுதல் என்று அர்த்தப்படுகிறது (மத்தேயு 19:29; எபிரெயர் 1:14; 1 பேதுரு 3:9; மத்தேயு 25:34; எபேசியர் 1:14)"* (Jones, 305). [46]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இருதயக் கோளாறுடன் இருந்த சபை" என்ற பாடத்தில் "ஜெயங்கொள்ளுதல்" என்பதன்மீதான குறிப்புகளைக் காணவும்.* [47]KJV *வேதாகமம் இவ்வார்த்தையை* "the fearful" [*"பயம் நிறைந்தவர்கள்"*] *என்று தரவமைத்துள்ளது, இது ஒரு தவறான மனப்பதிவை விட்டுச்செல்லும். இது இயற்கையான பய உணர்வைப் பற்றியல்ல, ஆனால் நன்மையானவற்றைச் செய்வதில் ஒருவருக்குத் தடை ஏற்படுத்துகிற முழ்கடிக்கச் செய்யும் பயத்தைப் பற்றிப் பேசுகிறது. பயம் அடைந்திருந்தும்கூட, செய்ய வேண்டியவற்றைச் செய்கின்றவர்களிடத்தில் மிக உயர்ந்த தைரியம் காணப்படுகிறது.* [48]*"அருவருப்பு" என்ற வார்த்தை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டபடி, பொதுவாக விக்கிரகாராதனையுடன் தொடர்புடைய அருவருப்பான நடைமுறைகளைக் குறிக்கிறது. "வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் "பாபிலோன் உங்களை மோசம்போக்க முயற்சி செய்யும்போது" என்ற பாடத்தில், 17:4, 5க்கான குறிப்புகளைக் காணவும்.* [49]*கிறிஸ்தவர்கள் மற்ற கிறிஸ்தவர்களின் பெயர்களை வெளிப்படுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களின் கூற்றுப்படி, அந்த நிர்ப்பந்தத்திற்குச் சிலர் அடிபணிந்தனர் என்பது கவலைக்குரியதாயிருந்தது.* [50]*"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும், "தேவனுடைய எச்சரிக்கைகளைப் புறக்கணித்தலின் தவறு" என்ற பாடத்தில் 9:21க்கான விளக்கங்களைக் காணவும்.*

[51]*இந்தச் சொற்றொடர்களை இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுத்தி விளக்கியுரைப்பதற்கு, இங்கு இடம் என்னை அனுமதிப்பதில்லை, ஆனால் நீங்கள் அவ்வாறு செய்ய விரும்பலாம். 8ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாவங்கள் பற்றிய விபரங்களுக்கு ஒத்த வாக்கிய அட்டவணையொன்றில் காணவும். எடுத்துக்காட்டாக, பயத்துடன் இருத்தல் என்பதற்கு நீங்கள் 2 தீமோத்தேயு 1:7; எபிரெயர் 10:38, 39 ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். நீங்கள் இதைச் செய்தால், வசனப்பகுதியானது, இந்தப் பாவங்களைச் செய்திருந்து பின்பு தேவனிடத்தில் திரும்பியிருப்பவர்களை அல்ல, ஆனால் இந்தப் பாவங்களில் இருந்து மனந்திரும்ப மறுத்து திருந்த முடியாத நிலையில் இருப்பவர்களையே குறிக்கிறது என்பதை விளக்கப்படுத்த நீங்கள் விரும்புவீர்கள்.* [52]George Eldon Ladd, *A Commentary on the Revelation of John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 277. [53]One good source is Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 490-97.

# மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. நீங்கள் புதிய விஷயங்களை விரும்புகின்றீர்களா? வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள சில "புதிய விஷயங்கள்" யாவை?
2. வெளிப்படுத்தின விசேஷம் 21:1-22:5 வசனப்பகுதி பூமியில் உள்ள சபை அல்லது பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்ட சபை இவற்றில் எதை விவரிக்கிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
3. "புதிய பூமி" என்பது பௌதீகரீதியான பூமியாய் இருக்குமா? "புதிய வானம்" மற்றும் "புதிய பூமி" என்ற சொற்றொடர்களை யோவான் பயன்படுத்தியது ஏன்?
4. பூமிக்குரிய நகரங்கள் நல்ல மற்றும் மோசமான குணங்கள் இரண்டையும் கொண்டுள்ளன. ''புதிய எருசலேம்'' என்ற சொற்றொடரின்மூலம் சிந்தைக்குக் கொண்டுவரப்படுகிற நல்ல குணங்கள் யாவை?
5. 2ம் வசனத்தில் ''மணவாட்டி'' எனப்படுவது யார்? மணவாட்டி என்ற உருவகம் கர்த்தருடைய சபை பற்றி நமக்குக் கூறுவது என்ன?
6. 3ம் வசனம், தேவன் நம்மோடு ''வாசம் பண்ணுவார்'' என்று நமக்குக்கூறுகிறது. ஜார்ஜ் லேடு என்பவர், ''தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையில், நேரடியான சிதைவடையாத ஐக்கியம் என்பதே எல்லா மீட்பின் இலக்காகவும் உள்ளது" என்று கூறினார். நீங்கள் இதை ஒப்புக்கொள்கின்றீர்களா அல்லது கருத்து வேறுபடுகின்றீர்களா?
7. 4ம் வசனத்தில் உள்ள எந்த வாக்குத்தத்தம் உங்களுக்கு மதிப்பு மிக்கதாக உள்ளது? ஏன்?
8. 6ம் வசனத்தில் உள்ள ''இலவசமாய்'' என்ற வார்த்தை மிகவும் முக்கியமானதாக இருப்பது ஏன்?
9. ''அல்பா'' மற்றும் ''ஒமேகா'' என்பவை யாவை? தேவன், அவர் செய்வார் என்று கூறுபவற்றைச் செய்வார் என்ற நமது நம்பிக்கைக்கு இந்தச் சொற்றொடர்கள் என்ன செய்யக்கூடும்?
10. 7 மற்றும் 8ம் வசனங்களின்படி, பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் ஒவ்வொருவருக்கும் உரியவையா? ''ஜெயங்கொள்ளுகிறவன்'' என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன?
11. 8ம் வசனத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பாவங்கள் இன்றைய நாட்களில் இன்னமும் (உலகத்தில்) மேற்கொண்டு இருக்கின்றனவா? அவைகள் நமது சொந்த வாழ்வையும் பாதிக்கக்கூடுமா?
12. கடைசியில், ஒருவர் தம் வாழ்வில் "தோல்வி" அடைந்தாரா அல்லது "வெற்றி" பெற்றாரா என்பதை தீர்மானிப்பது எது?